**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**OMR Sheet No. :** ..............................................
(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | | |
(In figures as per admission card)

**Roll No.** ____________________
(In words)

**J 0 2 6 1 8**

# PAPER - II
# TAMIL

**Time : 2 hours]** **[Maximum Marks : 200**

Number of Pages in this Booklet : **24** Number of Questions in this Booklet : **100**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of hundred multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** ① ② ● ④ where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry original question booklet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There are no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में सौ बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं। आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।
   **उदाहरण :** ① ② ● ④ जबकि (3) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं। यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें। हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका अपने साथ ले जा सकते हैं।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही प्रयोग करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं।**



www.examrace.com

# TAMIL
# தமிழ்
## PAPER - II
## தாள் - II

**Note :** This paper contains **hundred (100)** objective type questions of **two (2)** marks each. **All** questions are **compulsory.**

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நூறு (100)** விடை தெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் **இரண்டு (2)** மதிப்பெண்கள். **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘புனைந்துரை உலகியல் எனும் திறம் இரண்டினும்’ என்னும் அகப்பொருள் விளக்க நூற்பாவில் கூறப்படும் புனைந்துரை என்பது :
   (1) புலனெறி வழக்கு (2) நாடக வழக்கு
   (3) தொல்லியல் வழக்கு (4) இலக்கிய வழக்கு

2. ‘பாப்புக் கொடியாற்குப் பான்மேனி யான் போல’ என்பதில் இடம் பெறும் பாப்புக் கொடியான் யார் ?
   (1) அர்ச்சுனன் (2) தருமன்
   (3) வீமன் (4) துரியோதனன்

3. கழி நெடிலடி என்பது :
   (1) ஐஞ்சீரின் மிக்கது
   (2) ஐஞ்சீரினது
   (3) ஐஞ்சீரின் குறைந்தது
   (4) நாற்சீரானும் ஐஞ்சீரானும் அறுசீரானும் வருவது

4. மீள வாசித்தாலும் அதுவே யாவது :
   (1) ஏக பாதம் (2) சக்கரம்
   (3) மாலை மாற்று (4) ஓரினப் பாட்டு

5. மணிப்பிரவாளம் என்பது தமிழோடு :
   (1) வடவெழுத்து விரவுவது (2) வடமொழி விரவுவது
   (3) பன்மொழி விரவுவது (4) மொழி கலவாது தனித்தியல்வது

6. விருந்துக்கு எடுத்துக்காட்டாக நச்சினார்க்கினியர் கூறுவது :
   (1) கலித்தொகை (2) கார் நாற்பது
   (3) சிலப்பதிகாரம் (4) முத்தொள்ளாயிரம்


www.examrace.com

7. நம்மாழ்வார் முதலில் அருளிச் செய்தது :
(1) திருவாசிரியம்
(2) திருவாய்மொழி
(3) திருவிருத்தம்
(4) பெரிய திருவந்தாதி

8. மண்மகள் இதய கமலம் எனப் போற்றப்படுவது :
(1) திருவாரூர்
(2) திருவானைக்கா
(3) திருத்தணிகை
(4) திருமாலிருஞ்சோலை

9. 'குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனை முத்துக் குமாரனைப் போற்றுதும்' எனப் பாடியவர் :
(1) கச்சியப்ப முனிவர்
(2) பாம்பன் சுவாமிகள்
(3) அருணகிரிநாதர்
(4) குமரகுருபரர்

10. தமிழலங்காரம் பாடியவர் :
(1) ஔவையார்
(2) தண்டபாணி சுவாமிகள்
(3) அருணகிரிநாதர்
(4) குமரகுருபரர்

11. காவல் பிரிவின் கால அளவு :
(1) மூவாண்டு
(2) ஓராண்டு
(3) ஈராண்டு
(4) நாலாண்டு

12. 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' என்னும் பாடலைப் பாடியவர் :
(1) கடுவெளிச் சித்தர்
(2) பட்டினத்தார்
(3) அகப்பேய்ச் சித்தர்
(4) குதம்பைச் சித்தர்

13. கதைத் தலைவன் தன் மனைவியின் நெற்றியில் வண்ணக்குழம்பால் மடல் தீட்டித் தன் காதலியைக் காணச் செய்த செய்தி இடம்பெறும் காப்பியம் :
(1) உதயணகுமார காவியம்
(2) பெருங்கதை
(3) சூளாமணி
(4) சீவகசிந்தாமணி

14. 'வேம்புடன் கடுவும் போல வெஞ்சொல்' என்று கூறும் நூல் :
(1) சிலப்பதிகாரம்
(2) தண்டியலங்காரம்
(3) தொல்காப்பியம்
(4) சீவகசிந்தாமணி

15. ஒரு பொருள் எத்தனை பேர் அறியின் பரசியம் ?
(1) மூவர்
(2) ஒருவர்
(3) நால்வர்
(4) இருவர்



www.examrace.com

16. ‘யாழே வீணை ஆயிற்று’ என ஆய்ந்து கண்டவர் :
(1) கரிகாற் சோழன் (2) பாண்டியன் நெடுஞ்செழியன்
(3) வரகுண பாண்டியன் (4) இளஞ்சேரல் இரும்பொறை

17. ‘‘அறிவன்’’ எனப்படும் கோள் :
(1) புதன் (2) வியாழன் (3) வெள்ளி (4) சனி

18. ‘எண்ணும் எழுத்தும் கண்’ என்பதில் எண் என்பது :
(a) ஏரணம் (b) அளவை (c) நியாயம் (d) தருக்கம்
இவற்றுள்
(1) (a), (b), (d) சரி (2) (a), (b), (c) சரி
(3) (a), (b), (c), (d) சரி (4) (a), (c), (d) சரி

19. எழுத்தின் வேறு பெயர்கள் :
(a) பொறி (b) வரி (c) இரேகை (d) இலேகை
இவற்றுள்
(1) (a), (b), (c) சரி (2) (a), (b), (c), (d) சரி
(3) (a), (b), (d) சரி (4) (a), (c), (d) சரி

20. அரசனால் செய்யப்படும் சிறப்புக்கள் :
(a) மாராயம் (b) எட்டி (c) ஏனாதி (d) காவிதி
இவற்றுள்
(1) (a), (b), (c), (d) சரி (2) (a), (b), (d) சரி
(3) (a), (b), (c) சரி (4) (a), (c), (d) சரி

21. தம்முடனே தாமே மயங்கும் மெய்கள் :
(a) க் (b) ச் (c) த் (d) ப்
இவற்றுள்
(1) (a), (c), (d), சரி (2) (a), (b), (d) சரி
(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

22. காமம் கூடியார் பெற்ற பயன் :
(a) ஆடல் (b) ஊடல் (c) உணர்தல் (d) புணர்தல்
இவற்றுள்
(1) (a), (c), (d) சரி (2) (b), (c), (d) சரி
(3) (a), (b), (d) சரி (4) (a), (b), (c), (d) சரி



www.examrace.com

23. தாமரை மலரை நிகர்த்த அமைப்பினது :

(a) பூம்புகார் (b) தில்லை (c) மதுரை (d) தஞ்சை

இவற்றுள்

(1) (a), (c), (d) சரியல்ல (2) (a), (b), (d) சரியல்ல

(3) (a), (b), (c) சரியல்ல (4) (a), (b), (c), (d) சரியல்ல

24. ஆசிரியர் அல்லாதவர்க்கு நன்னூல் கூறும் எடுத்துக்காட்டுகள் :

(a) கழற்குடம் (b) மடற்பனை

(c) பருத்திக் குண்டிகை (d) முடத்தெங்கு

இவற்றுள்

(1) (a), (b), (c), (d) சரி (2) (a), (b), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (c), (d) சரி

25. சூபிப் புலவர் எனப் போற்றப் பெறுபவர் :

(a) உமறுப்புலவர் (b) குணங்குடி மஸ்தான்

(c) சவ்வாதுப் புலவர் (d) செய்குத் தம்பிப் பாவலர்

இவற்றுள்

(1) (a), (c), (d), சரியல்ல (2) (b), (c), (d) சரியல்ல

(3) (a), (b), (c), (d) சரியல்ல (4) (a), (b), (d) சரியல்ல

26. தோழிக்குரிய சொலத்தகும் கிளவி நிகழும் சூழல் :

(a) புலத்தல் (b) வெகுளல் (c) ஊடல் (d) இழித்தல்

இவற்றுள்

(1) (a), (d) சரி (2) (a), (b) சரி

(3) (a), (c) சரி (4) (a), (b), (c) சரி

27. வடமொழியாளர் கூறும் சந்தி வகைகள் :

(a) ஆக்கம் (b) தீர்க்கம் (c) குணம் (d) விருத்தி

இவற்றுள்

(1) (b), (c), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

28. ‘சரஸ்வதி சம்மான்’ விருது பெற்றோர் :

(a) இந்திரா பார்த்தசாரதி (b) ஜெயகாந்தன்

(c) நா. பார்த்தசாரதி (d) அ.அ. மணவாளன்

இவற்றுள்

(1) (a), (c) சரி (2) (a), (d) சரி

(3) (a), (b) சரி (4) (b), (d) சரி



www.examrace.com

29. திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரம் படி உரை கண்டோர் :

(a) ஆளவந்தார் (b) நம்பிள்ளை

(c) பெரியவாச்சான் பிள்ளை (d) நஞ்சீயர்

இவற்றுள்

(1) (a), (c) சரி (2) (a), (d) சரி

(3) (a), (b) சரி (4) (b), (d) சரி

30. புறநானூறு வழி அறியலாகும் நில அளவைகள் :

(a) செறு (b) நிறை (c) மா (d) நாழி

இவற்றுள்

(1) (a), (d) சரி (2) (a), (b) சரி

(3) (a), (c) சரி (4) (a), (b), (c) சரி

31. உமணர் வீடுகளில் வளர்க்கப்பட்ட விலங்கு :

(a) குரங்கு (b) நாய் (c) கேழல் (d) பூனை

இவற்றுள்

(1) (b), (c), (d) சரியல்ல (2) (a), (c), (d) சரியல்ல

(3) (a), (b), (c) சரியல்ல (4) (a), (b), (c), (d) சரியல்ல

32. செம்மொழித் தமிழாய்வு நிறுவன விருது பெற்ற அயல்நாட்டினர் :

(a) அஸ்கோ பர்ப்போலா (b) உல்ரிக் நிக்கோலஸ்

(c) வாசெக் (d) ஜார்ஜ் எல். ஹார்ட்

இவற்றுள்

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

33. விருத்தப்பாவால் இயன்றவை :

(a) சூடாமணி நிகண்டு (b) அரும்பொருள் விளக்க நிகண்டு

(c) நாநார்த்த தீபிகை (d) சிந்தாமணி நிகண்டு

இவற்றுள்

(1) (b), (d), (c) சரி (2) (a), (b), (d) சரி

(3) (a), (b), (c), (d) சரி (4) (a), (b), (c), (d) சரியல்ல

34. சங்க இலக்கியம் கூறும் சங்கங்களைக் குறிக்கும் பெயர்கள் :

(a) புணர்கூட்டு (b) தொகை (c) கழகம் (d) தமிழ்நிலை

இவற்றுள்

(1) (a), (b), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி



www.examrace.com

35. உறுதிக் கூற்று : (உ.) : ஒருவருக்கு நேரடியாகக் கூறுவதாகச் செய்யுள் இயற்றும் மரபுள் மகடூஉ முன்னிலை என்பதும் ஒன்று.

காரணம் : (கா.) : யாப்பருங்கலக் காரிகைச் செய்யுள்கள் ஆண்மகன் ஒருவனுக்கு யாப்பிலக்கணம் கூறுவதாய் அமைந்துள்ளன.

(1) (உ.), (கா.) இரண்டும் சரி (2) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல
(3) (உ.) சரியன்று (கா.) சரி (4) (உ.) சரி (கா.) சரியன்று

36. உறுதிக் கூற்று : (உ.) : வைணவ வழக்கில் சிறப்புப் பாயிரம் 'தனியன்' எனப்படும்.

காரணம் : (கா.) : நூலினுள் சேராது அதன் புறத்தே தனித்து நின்று நூற் சிறப்பையோ ஆசிரியர் சிறப்பையோ இரண்டையுமோ எடுத்துரைப்பது அது.

(1) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல (2) (உ.), (கா.) இரண்டும் சரி
(3) (உ.), சரியன்று, (கா.) சரி (4) (உ.) சரி (கா.) சரியன்று

37. உறுதிக் கூற்று : (உ.) : பாயிரம் இல்லது பனுவல் அன்றே என்பர்

காரணம் : (கா.) : நுண் பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்குப் பருப்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்

(1) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல (2) (உ.), (கா.) இரண்டும் சரி
(3) (உ.), சரி, (கா.) சரியன்று (4) (உ.) சரியன்று, (கா.) சரி

38. உறுதிக் கூற்று : (உ.) : கவிஞர்களுள் ஒரு சாரார் சரமகவி எனப்படுவர்.

காரணம் : (கா.) : புரவலர்களிடம் பரிசில் பெற்று வாழ்ந்த புலவர்கள் அவர்கள்.

(1) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல (2) (உ.), (கா.) இரண்டும் சரி
(3) (உ.) சரி, (கா.) சரியன்று (4) (உ.) சரியன்று, (கா.) சரி

39. உறுதிக் கூற்று : (உ.) : உறையூருக்குப் பண்டு கோழியூர் எனப் பெயர் ஒன்று இருந்தது.

காரணம் : (கா.) : அவ்வூரில் மக்கள் கண்டு மகிழ வாரந்தோறும் கோழிப்போர் நடத்தப்பட்டது.

(1) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல (2) (உ.), (கா.) இரண்டும் சரி
(3) (உ.), சரியன்று, (கா.) சரி (4) (உ.) சரி, (கா.) சரியன்று



www.examrace.com

40. உறுதிக் கூற்று : (உ.) : பரணி இலக்கியத்தின் களம்பாடியது என்னும் பிரிவின் வளர்ச்சியே செருக்கள வஞ்சி என்னும் சிற்றிலக்கிய வகை ஆகும்.

காரணம் : (கா) : அரசனின் போர்க்களச் செய்திகளைப் பாடுவது அது.

இவற்றுள்

(1) (உ.), (கா.) இரண்டும் சரி (2) (உ.) சரியன்று, (கா.) சரி

(3) (உ.) சரி, (கா.) சரியன்று (4) (உ.), (கா) இரண்டு சரியன்று

41. உறுதிக் கூற்று : (உ.) : 'விளையாடவோ வந்தீர்கள்' என்பதில் ஓகாரம் ஒழியிசைப் பொருளுடையது.

காரணம் : (கா.) : விளையாட அல்ல, படிக்க என ஒன்றை மறுத்து வேறு ஒன்றைக் குறிக்கிறது.

(1) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல (2) (உ.) சரியன்று (கா.) சரி

(3) (உ.) சரி (கா.) சரி (4) (உ.) சரி (கா.) சரியன்று

42. உறுதிக் கூற்று : (உ.) : பள்ளு இலக்கியம் நாடக இலக்கியமாகவும் கொள்ளப்படும்.

காரணம் : (கா.) : பள்ளன், மூத்த பள்ளி, இளைய பள்ளி, பண்ணைக்காரர் ஆகியோரைப் பாத்திரங்களாய் உடையது அது.

(1) (உ.), (கா.) இரண்டும் சரி (2) (உ.), சரியன்று (கா.) சரியன்று

(3) (உ.), சரியன்று, (கா.) சரி (4) (உ.), சரி (கா.) சரியன்று

43. உறுதிக் கூற்று : (உ.) : தாழ்ந்த குலத்தினர் எனக் கருதப்படுவோரை இராமானுசர் 'திருக்குலத்தார்' என்கிறார்.

காரணம் : (கா.) : மக்களுள் ஏற்றத்தாழ்வு இல்லை; அனைவரும் இறைவன் படைப்பே என்னும் கருத்தினர் அவர்.

(1) (உ.) சரியன்று, (கா.) சரியன்று (2) (உ.), சரி (கா.) சரி

(3) (உ.) சரியன்று, (கா.) சரி (4) (உ.) சரி, (கா.) சரியன்று

44. உறுதிக் கூற்று : (உ.) : மகேந்திரவர்மன், சங்கீரணசாதி எனவும் அழைக்கப்படுவான்

காரணம் : (கா.) : சங்கீரணம் என்னும் தாளத்தை அவன் கண்டுபிடித்தான்.

(1) (உ.) சரியன்று, (கா.) சரியன்று (2) (உ.) சரி, (கா.) சரியன்று

(3) (உ.) சரியன்று, (கா.) சரி (4) (உ.) சரி, (கா.) சரி

45. உறுதிக் கூற்று : (உ.) : பரிபாடல்வழி ஏழ்புழை அறியப்படுகிறது.

காரணம் : (கா.) : ஏழுதுளையான வங்கியம் அது.

(1) (உ.), (கா) இரண்டும் சரியல்ல (2) (உ.), (கா.) இரண்டும் சரி

(3) (உ.) சரியன்று, (கா.) சரி (4) (உ.) சரி, (கா.) சரியன்று



www.examrace.com

46. உறுதிக் கூற்று : (உ.) : குறிப்பிட்ட சிலரைப் 'பருத்திப் பெண்டிர்' எனப் புறநானூறு குறிக்கிறது.
காரணம் : (கா.) : பருத்தியிலிருந்து பஞ்செடுத்து விற்பதைத் தொழிலாகக் கொண்ட மங்கல மகளிர் அவர்கள்.
(1) (உ.), (கா) இரண்டும் சரியல்ல (2) (உ.) சரியன்று, (கா.) சரி
(3) (உ.) சரி, (கா.) சரியன்று (4) (உ.) சரி, (கா.) சரி

47. உறுதிக் கூற்று : (உ.) : 'அறிமடமும் சான்றோர்க்கு அணி'.
காரணம் : (கா.) : முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் முறையே பாரியும் பேகனும் அளித்தனர்.
(1) (உ.), (கா.) இரண்டும் சரி (2) (உ.) சரியன்று, (கா.) சரியன்று
(3) (உ.) சரியன்று, (கா.) சரி (4) (உ.) சரி, (கா.) சரியன்று

48. உறுதிக் கூற்று : (உ.) : 'மங்கல வள்ளை' என்பது ஒரு சிற்றிலக்கிய வகை.
காரணம் : (கா.) : உலக்கை குத்தும் போது கற்பின் திறத்தை வாழ்த்தி மகளிர் பாடுவதாக அமைவது அது.
(1) (உ.) சரியன்று, (கா.) சரியன்று (2) (உ.) சரி, (கா.) சரியன்று
(3) (உ.) சரியன்று, (கா.) சரி (4) (உ.) சரி, (கா.) சரி

49. உறுதிக் கூற்று : (உ.) : சிற்றிலக்கிய வகைகளுள் 'தாரகைமாலை என்பதும் ஒன்று.
காரணம் : (கா.) : கார்த்திகை, அருந்ததி, இரேவதி போன்று கற்புடைய மகளிர் விண்மீன்களாக ஒளிர்வர் என்னும் பொருண்மையில் அமைந்தது அது.
(1) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல (2) (உ.) சரி, (கா.) சரியன்று
(3) (உ.) சரியன்று, (கா.) சரி (4) (உ.), (கா.) இரண்டும் சரி

50. உறுதிக் கூற்று : (உ.) : திருக்குறளில் கடவுள் வாழ்த்துக்கும் நீத்தார் பெருமைக்கும் இடையே வான்சிறப்பு இடம் பெற்றுள்ளது.
காரணம் : (கா.) : வான் சிறப்பானது மழையினது தலைமை கூறுதல் ஆகும்.
(1) (உ.), (கா) இரண்டும் சரியல்ல (2) (உ.) சரியன்று, (கா.) சரி
(3) (உ.) சரி, (கா.) சரியன்று (4) (உ.) சரி, (கா.) சரி

51. உறுதிக் கூற்று : (உ.) : பழைய வெண்பா ஒன்றின்படி எட்டுத்தொகையுள் மூன்று அகப்பொருள் நூலையடுத்துப் புறப்பொருள் நூல் ஒன்று அமைகிறது.
காரணம் : (கா.) : சேரமன்னர்தம் பெருமைகளைப் பேசுவது அது.
(1) (உ.), (கா) இரண்டும் சரி (2) (உ.) சரியன்று, (கா.) சரியன்று
(3) (உ.) சரி, (கா.) சரியன்று (4) (உ.) சரியன்று, (கா.) சரி


www.examrace.com

**52.** உறுதிக் கூற்று : (உ.) : மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே என்றும், என் வாழ் முதலாகிய பொருளே போற்றி என்றும் மணிவாசகப் பெருமான் பாடியுள்ளார்.

காரணம் : (கா.) : உலகின் அமைப்புக்கும் இயக்கத்துக்கும் உலகில் உடம்பொடு தோன்றும் உயிர்களின் வாழ்வுக்கும் திருமாலின் அருளே காரணம் என்பது வைணவக் கொள்கை ஆகும்.

(1) (உ.), (கா.) இரண்டும் சரியல்ல (2) (உ.) சரியன்று, (கா.) சரி

(3) (உ.) சரி, (கா.) சரி (4) (உ.) சரி, (கா.) சரியன்று

**53.** உறுதிக் கூற்று : (உ.) : தமிழின் பதினாறு சிறப்புப் பண்புகளுள் ஒன்றாகப் பாவாணர் வியன்மையைக் குறிப்பிடுகிறார்.

காரணம் : (கா.) : உலக மொழிகள் பலவற்றின் சொற்கள் தமிழ்மொழியில் இடம் பெற்றுள்ளன.

(1) (உ.) சரி, (கா.) சரியன்று (2) (உ.) சரியன்று, (கா.) சரி

(3) (உ.) சரியன்று, (கா.) சரியன்று (4) (உ.), (கா.) இரண்டும் சரி

**54.** உறுதிக் கூற்று : (உ.) : சிற்றிலக்கிய வகைகளுள் வசந்தமாலை என்பதும் ஒன்று.

காரணம் : (கா.) : வசந்தமாலை என்பாளின் கற்புத் திறத்தைப் புகழ்ந்து பேசுவது அது.

(1) (உ.), (கா) இரண்டும் சரியல்ல (2) (உ.) சரியன்று, (கா.) சரி

(3) (உ.) சரி, (கா.) சரியன்று (4) (உ.), (கா.) இரண்டும் சரி

**55.** நிரப்படுத்துக :

வீரசோழியம் கூறும் மொழி வகை

(a) வடசொல் (b) திரிசொல் (c) திசைச்சொல் (d) செஞ்சொல்

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)

**56.** நிரல்படுத்துக :

தன்மையுவமை வகை

(a) திரப்பியம் (b) தொழில் (c) சாதி (d) குணம்

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)

**57.** நிரல்படுத்துக :

வள்ளுவர் நூற்கெல்லை யுரையெழுதினோர்

(a) கலிப்பெருமாள் (b) திருமலையர்

(c) காலிங்கர் (d) மல்லர்

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)



www.examrace.com

58. நிரல்படுத்துக :

பூவின் பின் நான்கு பருவங்கள் :

(a) அலர் (b) செம்மல் (c) மலர் (d) வீ

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)

59. நிரல்படுத்துக :

அறநெறிச்சாரம் கூறும் மும்மூடங்கள் :

(a) பாசண்டி மூடம் (b) தேவ மூடம் (c) உலக மூடம்

(1) (b), (a), (c), (2) (c), (a), (b)

(3) (b), (c), (a) (4) (a), (c), (b)

60. நிரல்படுத்துக :

உதயணின் முதன்மை அமைச்சர்கள் :

(a) இடவகன் (b) யூகி

(c) உருமண்ணுவா (d) வயந்தகன்

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)

61. நிரல்படுத்துக :

அகப்பொருள் விளக்கம் கூறும் நில வகைகள் :

(a) சுரம் (b) பழனம் (c) வரை (d) புறவு

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)

62. நிரல்படுத்துக :

(a) கோதற்ற ஞானக்கொழுந்தின்முன் செல்க குணங்கடந்த

(b) வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர்

(c) போதங் கடலெங்க டென்குரு கூர்ப்புளி தன்கவியோர்

(d) பாதத்தின் முன்செல்லு மேதொல்லை மூலப் பரஞ்சுடரே

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (b), (a), (c), (d)

63. நிரப்படுத்துக :

அட்டமா சித்திகளுள் இறுதி நான்கு

(a) பரகாமியம் (b) வசித்துவம் (c) பிராப்தி (d) ஈசத்துவம்

(1) (a), (c), (b), (d) (2) (b), (d), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (d), (b), (c), (a)



www.examrace.com

64. நிரல்படுத்துக :

காமம் ஆக்கும் ஐவகைக் கணைகள் :

(a) சோகம் (b) சுப்பிரயோகம் (c) மரணம்

(d) விப்பிரயோகம் (e) மோகம்

(1) (a), (c), (e), (b), (d) (2) (b), (d), (a), (e), (c)

(3) (c), (e), (a), (d), (b) (4) (d), (b), (e), (c), (a)

65. நிரல்படுத்துக :

அரிச்சந்திர புராணம் கூறும் பஞ்சமா பாதகங்கள் :

(a) கள் (b) கொலை (c) புலை

(d) கள்ளம் (e) காமம்

(1) (b), (d), (a), (e), (c) (2) (d), (b), (a), (c), (e)

(3) (e), (c), (a), (d), (b) (4) (a), (e), (c), (b), (d)

66. நிரல்படுத்துக :

சித்தருள் பஞ்சவர் :

(a) பட்டினத்தார் (b) கருவூரார் (c) சிவவாக்கியர்

(d) திருமாளிகைத் தேவர் (e) திருமூலர்

(1) (b), (d), (a), (e), (c) (2) (d), (b), (a), (c), (e)

(3) (e), (c), (a), (d), (b) (4) (a), (e), (c), (b), (d)

67. நிரல்படுத்துக :

காலவரிசையில் நாட்குறிப்பு நூல்கள்

(a) வீரா நாயக்கர் (b) ஆனந்தரங்கம் பிள்ளை

(c) நாட்டார் (d) ரங்கப்பத் திருவேங்கடம்

(1) (b), (d), (a), (c) (2) (a), (c), (b), (d)

(3) (d), (b), (c), (a) (4) (c), (a), (d), (b)

68. நிரல்படுத்துக :

தொல்காப்பியம் கூறும் பெண்ணின் இயல்புகள் :

(a) செறிவு (b) செம்மை (c) நிறைவு (d) செப்பு

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)

69. நிரல்படுத்துக :

கன்று எனற்கு உரிய என்று தொல்காப்பியம் கூறுவனவற்றுள் முதல் நான்கு :

(a) கழுதை (b) குதிரை (c) கடமை (d) யானை

(1) (b), (d), (a), (c) (2) (d), (b), (a), (c)

(3) (c), (a), (d), (b) (4) (a), (c), (b), (d)



www.examrace.com

**70.** நிரல்படுத்துக :

நூல் பெயர் பெறும் விகற்பங்கள் :

(a) செய்வித்தான் (b) அளவு (c) செய்தான்

(d) இடுகுறி (e) சிறப்பு

(1) (b), (d), (a), (c), (e)
(2) (d), (b), (a), (c), (e)
(3) (c), (a), (d), (b), (e)
(4) (a), (c), (b), (e), (d)

**71.** பொருத்துக :

(a) கி.வா. ஜகந்நாதன் (i) அக்கரைச் சீமை

(b) புவியரசு (ii) ஆகாயத்துக்கு அடுத்த வீடு

(c) மு. மேத்தா (iii) வீரர் உலகம்

(d) மீ.ப. சோமு (iv) கையொப்பம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

**72.** பொருத்துக :

(a) பொருநராற்றுப்படை (i) நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை

(b) நற்றிணை (ii) அரவுரியன்ன அறுவை

(c) கொன்றை வேந்தன் (iii) இளமையிற் சிறந்த வளமையும் இல்லை

(d) வெற்றி வேற்கை (iv) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

**73.** பொருத்துக :

(a) சேர சூரியன் (i) வே. கபிலன்

(b) சேரமா தேவி (ii) கோகுல் சேஷாத்திரி

(c) சேரர் கோட்டை (iii) சாண்டில்யன்

(d) சேரன் செல்வி (iv) கோ.வி. மணிசேகரன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.examrace.com

**74.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வையாபுரிப்பிள்ளை | (i) | இலக்கிய விளக்கம் |
| (b) | வ.சுப. மாணிக்கம் | (ii) | இலக்கிய தீபம் |
| (c) | நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை | (iii) | இலக்கியப் பெட்டகம் |
| (d) | நஞ்சுண்டன் | (iv) | இலக்கிய இன்பம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

**75.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | (i) | அளத்தியர் |
| (b) | முல்லை | (ii) | கடைசியர் |
| (c) | மருதம் | (iii) | கொடிச்சியர் |
| (d) | நெய்தல் | (iv) | ஆய்ச்சியர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

**76.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பொய்கையாழ்வார் | (i) | திருக்கடன் மல்லை |
| (b) | பூதத்தாழ்வார் | (ii) | திருமயிலை |
| (c) | பேயாழ்வார் | (iii) | திருக்கோளூர் |
| (d) | மதுரகவி | (iv) | கச்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.examrace.com

77. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | நலம் என்பதில் அம் | (i) | வினையெச்ச விகுதி |
| (b) | கொலை என்பதில் ஐ | (ii) | பண்புப்பெயர் விகுதி |
| (c) | படுக்கும் என்பதில் உம் | (iii) | தொழிற்பெயர் விகுதி |
| (d) | படிக்க என்பதில் அ | (iv) | பெயரெச்ச விகுதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

78. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அளகு | (i) | இளமைப் பெயர் |
| (b) | குருளை | (ii) | பெண்மைப் பெயர் |
| (c) | இரலை | (iii) | இருதிணைப் பொதுப்பெயர் |
| (d) | பிள்ளை | (iv) | ஆண்மைப் பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

79. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அரோ | (i) | உரையசை |
| (b) | மன் | (ii) | பிரிவில் அசைநிலை |
| (c) | என்பது | (iii) | அசைநிலை |
| (d) | ஆங்க | (iv) | ஒழியிசை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.examrace.com

80. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | உரம் | (i) | உயிரும் இடையினமும் |
| (b) | சிரம் | (ii) | வல்லினம் |
| (c) | கண்டம் | (iii) | மெல்லினம் |
| (d) | மூக்கு | (iv) | ஆய்தம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (ii) | (i) | (iii) | (iv) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

81. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பாண்டிமா தேவி | (i) | விஷ்வக் சேனன் |
| (b) | பாண்டியன் மகள் | (ii) | விக்ரமன் |
| (c) | பாண்டிய நாயகி | (iii) | கௌதம நீலாம்பரன் |
| (d) | பாண்டிய மகுடம் | (iv) | இந்திரா சௌந்திரராஜன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

82. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அழகர் மலை | (i) | இடைக்காடர் |
| (b) | திருவண்ணாமலை | (ii) | பாம்பாட்டிச் சித்தர் |
| (c) | மருதமலை | (iii) | போகர் |
| (d) | பழனிமலை | (iv) | இராம தேவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.examrace.com

83. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | காதல் ஜோதி | (i) | சோ |
| (b) | நச்சுக்கோப்பை | (ii) | கோமல் சுவாமிநாதன் |
| (c) | அலைக்காற்று | (iii) | அண்ணா |
| (d) | யாரிடமும் சொல்லாதே | (iv) | மு. கருணாநிதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

84. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பெண் பேசிக் கோடல் | (i) | குறுந்தொகை |
| (b) | வயாவில் புளி விரும்பல் | (ii) | நற்றிணை |
| (c) | வேள்வியால் சுவர்க்கம் புகல் | (iii) | ஐங்குறுநூறு |
| (d) | வீட்டில் விளக்கு வைத்தல் | (iv) | மதுரைக்காஞ்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

85. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சித்திர வண்ணம் | (i) | ஆய்தம் பயில்தல் |
| (b) | தாஅ வண்ணம் | (ii) | சொற் சீர்த்தாகி நூற்பால் பயில்தல் |
| (c) | நலிபு வண்ணம் | (iii) | இடையிட்டு வந்த எதுகைத்து |
| (d) | பாஅ வண்ணம் | (iv) | நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வரல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iii) | (iv) | (i) | (ii) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.examrace.com

86. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இல. செ. கந்தசாமி | (i) | பழந்தமிழர் பொறியியல் நுட்பத்திறன் |
| (b) | பழ. கோமதி நாயகம் | (ii) | பழந்தமிழரும் பொறியியலும் |
| (c) | கொடுமுடி ச. சண்முகன் | (iii) | தமிழர் பாசன வரலாறு |
| (d) | வா.செ. குழந்தைசாமி | (iv) | தமிழர் வேளாண்மை மரபுகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (i) | (ii) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iii) | (i) | (iv) |
| (3) | (iii) | (iv) | (i) | (ii) |
| (4) | (iv) | (iii) | (i) | (ii) |

87. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அவல் இடித்தல் | (i) | பட்டினப்பாலை |
| (b) | அறச்சாலை அமைத்தல் | (ii) | பெரும்பாணாற்றுப்படை |
| (c) | அகழியில் முதலையை இடல் | (iii) | பொருநராற்றுப்படை |
| (d) | அரசவையில் முறையிடல் | (iv) | பதிற்றுப்பத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

88. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திவாகரம் | (i) | கட்டளைக்கலித்துறை |
| (b) | உரிச்சொல் நிகண்டு | (ii) | நூற்பா |
| (c) | சூடாமணி நிகண்டு | (iii) | வெண்பா |
| (d) | கயாதரம் | (iv) | விருத்தம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iii) | (iv) | (i) | (ii) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

89. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | புணர்வு | (i) | அச்சம் |
| (b) | உறுப்பறை | (ii) | பெருமிதம் |
| (c) | இசைமை | (iii) | உவகை |
| (d) | இறை | (iv) | வெகுளி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.examrace.com

90. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | அரிசில்கிழார் | (i) | இளஞ்சேரலிரும்பொறை |
| (b) | பெருங்குன்றூர்க்கிழார் | (ii) | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| (c) | குமட்டூர்க் கண்ணனார் | (iii) | களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் |
| (d) | காப்பியாற்றுக் காப்பியனார் | (iv) | தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |

**(91-94)** பின்வரும் கவிதைப் பகுதியை ஊன்றிப் படித்து அதன் பின்வரு வினாக்களுக்கு ஏற்ற விடைகளைத் தெரிவு செய்க.

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல் வராம்இ தைத், தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண்டு அந்திக்குப் பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி!

பால்புகை முகிலைச் சீய்த்திப்
பளிச் சென்று ‘திங்கட் சேவல்’
நால்திக்கும் குரல் எடுத்து
நல்லொளி பாய்ச்சிப் பெட்டை
ஏற்பாட்டுக் கடங்காப் பொட்டுப்
பொடி விண்மீன் குஞ்சுகட்கும்
மேற்பார்வை செலுத்திப் ‘பூனை
இருட்டையும் வெளுத்துத் தள்ளும்

அதிர்ந்தது காற்று! நீளப்
பூங்கிளை அசைந்தா டிற்று!
முதிர்ந்திட்ட முகிலின் சேறு
மூடிற்றுச் சேற்றுக் குள்ளே
புதைந்திட்ட கதிரில் பூத்த
புதுப்புது வண்ண மெல்லாம்



www.examrace.com

ததும்பிற்றே வான வில்லாய்ப்
பாரடி அழகின் தன்மை

எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே
இத்தரை கொய்யாப் பிஞ்சு,
நீ அதில் சிற்றெறும்பே
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித்தானே மானே ?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே ?

**91.** உறுதிக் கூற்று : (உ.) : வானம் அந்திக்குப்பின் விண்மீனாய்க் கொப்பளித்தது.
காரணம் : (கா.) : உரிமை கேட்கும் வறியவர் புண்மீது அம்பு பாய்ச்சும் புலையர் செயலை வானம் கண்டது,

(1) (உ.) சரி, (கா) சரி
(2) (உ.) சரியன்று, (கா.) சரி
(3) (உ.) சரி, (கா.) சரியன்று
(4) (உ.) சரியன்று, (கா.) சரியன்று

**92.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பால் புகை | (i) | குஞ்சு |
| (b) | திங்கள் | (ii) | சேறு |
| (c) | விண்மீன் | (iii) | சேவல் |
| (d) | முகில் | (iv) | முகில் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (i) | (ii) | (iv) | (iii) |
| (2) | (iv) | (iii) | (i) | (ii) |
| (3) | (ii) | (iii) | (i) | (iv) |
| (4) | (iv) | (i) | (ii) | (iii) |

**93.** விண்ணை நோக்க இந்த மண் :

(1) சிற்றெறும்பு
(2) கொய்யாப் பிஞ்சு
(3) வானவில்
(4) பூங்கிளை

**94.** இருட்டையும் வெளுத்துத் தள்ளுவது :

(1) சேவல்
(2) சிற்றெறும்பு
(3) பூனை
(4) பூங்கிளை



www.examrace.com

**(95-100)** பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியில் கண்ட வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவு செய்க.

நாயகன், நாயகி பாவம் சங்க கால அகப்பொருள் மரபிலிருந்து சில அம்சங்களில் வேறுபடுகிறது. சங்க கால அகப்பொருள் மரபிலே தலைவன் பெயர் சுட்டக்கூடாது. தலைவன் பெயர் சுட்டும் அகப்பொருள் பாடல் புறத்திணைப் பாடலாகக் கொள்ளப் படுகிறது. புறநானூற்றிலே இத்தகைய காதற் பாட்டுக்கள் சில தொகுக்கப்பட்டுள்ளன. நெடுநல்வாடையில் வேப்பமாலை பற்றிய குறிப்பு வருவதால், அது பாண்டியனைப் பாடுவதாகக் கொண்டு புறத்திணைப் பாடலாகக் கொள்ளப்படுகிறது. இந்த அளவுகோலை வைத்துப் பார்க்கும் போது நாயகன் நாயகி பாவம் அமைந்துள்ள செய்யுள்கள் யாவும் புறத்திணைச் செய்யுள்களாகவே கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், இப்பாடல்கள் யாவும் சிவபெருமான் அல்லது திருமால் பெயரைச் சுட்டி இறைவன் பெருமை பேசுவனவாக அமைந்துள்ளன. அவ்வாறு அமையாவிட்டால் இப்பாடல்கள் பக்திப் பாடல்கள் என்ற தகுதியை இழந்து விடும்.

மேலும் சங்க கால அகத்திணையில் அன்பின் ஐந்திணையே பாராட்டிப் பேசப் படுகிறது. பல வகையாலும் ஒத்த காதலனும், காதலியும் கூடுவதும் கூட்டத்தை நாடி ஏங்குவதுமே அன்பின் ஐந்திணையாகும். அன்பின் ஐந்திணையே அகம் என்ற பெயருக்குச் சிறப்புரிமை உடையதாகும். சங்க காலச் செய்யுள்கள் பெரும்பாலும் அன்பினைந்திணையே பாடுகின்றன. கைக்கிளை, பெருந்திணை என்பன ஒருதலைக் காமம் என்றும் பொருந்தாக் காமம் என்றும் கூறப்பட்டுள்ளன. அன்பின் ஐந்திணையை மட்டும் அகமென்று கொள்வோர் கைக்கிளை, பெருந்திணை என்பனவற்றை அகப்புற மென்பர். கைக்கிளைச் செய்யுள்கள் சில ஐங்குறு நூற்றுள்ளே காணப்படுகின்றன. கலித்தொகையுளே கைக்கிளை, பெருந்திணைச் செய்யுள்கள் பல உள. நாயகன் நாயகி பாவச் செய்யுள்கள் அன்பினைந்திணைச் செய்யுள்கள் ஆமாறு விளக்கங்கள் கொடுக்கலாம். எனினும், பகுத்தறிவு நோக்கில் அவை கைக்கிளை, பெருந்திணைச் செய்யுள்களாகவே அடங்கும்.

சங்க கால அகத்திணைச் செய்யுள்களிலே தலைவன் கூற்றுக்களாக அமைந்த பாடல்கள் பல உள. தலைவன் பிரிவாற்றாமை பற்றியும் செய்யுள்கள் உள. பல்லவர் காலப் பக்திப் பாடல்களிலே, இத்தகைய செய்யுள்கள் இல்லை. இறைவன் நாயகனாக வும் ஆன்மா நாயகியாகவும் பாவனை செய்யப்படுவதால் நாயகியாகப் பாவனை செய்யும் அடியார் தலைவி கூற்றாகவும் தோழி, செவிலி முதலியோர் கூற்றாகவும் அமைந்துள்ள பாடல்களே காணப்படுகின்றன.

திருநாவுக்கரசு நாயனார் தாச மார்க்கத்திலும், திருஞானசம்பந்தர் சற்புத்திர மார்க்கத்திலும், சுந்தர மூர்த்தி நாயனார் சக மார்க்கத்திலும் நின்று சிவபெருமானை வழிபட்ட போதும், மூவர் பாடிய பதிகங்கள் சிலவற்றிலே நாயகன், நாயகி பாவம் தெளிவாக அமைந்துள்ளது. நுணுகி ஆராய்ந்தால் மூவர் முதலிகளுடைய வேறு சில பதிகங்களும் நாயகன், நாயகி பாவத்தில் அமைந்துள்ளனவென எடுத்துக் காட்டலாம். சில பதிகங்களிலே, சில பாடல்கள் நாயகன் நாயகி பாவத்திலே அமைந்துள்ளன.



www.examrace.com

தேவாரங்களிலுள்ள இத்தகைய பாடல்கள் இரண்டு வகையின. ஒருவகை, உணர்ச்சி வேகத்திலே பதிக அமைப்பிலே இறைவனைப் பாடிக்கொண்டு செல்லும் போது, தமக்கும் இறைவனுக்குமுள்ள நெருக்கத்தை உணர்த்துவதற்காக இறைவனையும் தம்மையும் காதலன் காதலியாக அமைத்துப் பாடுதல். இன்னொரு வகை தாருகாவனத்திலே சிவபெருமான் பிட்சானரூபத்தோடு பலி பெறச் சென்ற போது, அங்கிருந்த ரிஷிபத்தினியர் இறைவனை மோகித்தனர் என்னும் புராணக் கதையை வைத்து ரிஷிபத்தினியருள் ஒருவராகத் தம்மைக் கற்பனை செய்து பாடுவது. இருவகையிலும் அமைந்த பாடல்கள் மூவர் தேவாரங்களிலும் காணப்படுகின்றன. இறைவன் மேலே தமக்குள்ள அன்பின் வேகத்தையும் ஆழத்தையும் புலப்படுத்துவதற்காகக் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்ற துறையை மூவரும் பயன்படுத்தியுள்ளனர். வண்டு, கிளி, அன்னம், குயில், நாரை, பூவை முதலிய அஃறிணைப் பொருள்களைச் சிவபெருமானிடம் தூது விடுவதாக மூவரும் பயன்படுத்தியுள்ளனர். தலைவன் எழில், சிந்தை, நிறை, வளை, நீர்மை என்பனவற்றைக் கவர்ந்து விட்டதாகவும் தலைவனால் தமக்குப் பசலை நிறம் வளை கழலுதல், கலை சோர்தல் முதலிய ஏற்பட்டதாகவும் மூவரும் பாடியுள்ளனர்.

மாணிக்கவாசகர் அகமார்க்கமாகிய சன்மார்க்கத்தைப் பின்பற்றினார். இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் மாணிக்கவாசகர் பாவனை செய்து பாடிய போது, தேவாரம் பாடிய மூவரைப் போலத் தாருகாவனத்து ரிஷிபத்தினியர் பிட்சாடனராகிய சிவபெருமானை மோகித்த கதையை மாணிக்கவாசகர் துணை கொள்ளவில்லை. மாணிக்கவாசகர் தம்மைத் தலைவியாகக் கொண்டே திருவாசகம் முழுவதையும் பாடினார் என்று கூடக் கொள்ளலாம். அதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், திருவாசகத்துள் ஒரு பகுதி நாயகன் நாயகி பாவம் விளங்கித் தோன்றுமாறு மாணிக்கவாசகர் பாடியுள்ளார். திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம் என்ற திருவாசகப் பகுதிகள் மாணிக்கவாசக சுவாமிகள் நாயகன், நாயகி பாவத்திலே இறைவனைப் பாடுவதற்குத் தம்மை நாயகியாக மகளிர்ப் பொழுதுபோக்கு, உரையாடல் முதலிய பல்வேறு கோணங்களிலே பாவனை செய்து பாடியனவாகும்.

**95.** தாருகாவனத்து ரிஷிபத்தினியாகத் தன்னைக் கருதிப்பாடாதவர் :

(1) அப்பர் (2) மாணிக்கவாசகர்

(3) சுந்தரர் (4) சம்பந்தர்

**96.** நாயகன் நாயகி மரபில் அமைந்த பக்திப் பாடல்களில் அடியார் தம்மை யாராகக் கருதவில்லை ?

(1) தலைவியாக (2) தோழியாக

(3) செவிலியாக (4) தலைவனாக



www.examrace.com

**97.** சிவபெருமானிடத்தில் தூது விடப்பட்டனவாகத் தேவாரத்தில் பாடப்பட்டவை :

(a) அன்னம் (b) முகில் (c) குயில் (d) நாரை

(1) (a), (b), (c) சரி (2) (a), (c), (d) சரி

(3) (b), (c), (d) சரி (4) (a), (b), (c), (d) சரி

**98.** உறுதிக் கூற்று : (உ.) : நாயகன் நாயகி பாவம் அமைந்துள்ள சமயப் பாடல்கள் புறத்திணைச் செய்யுள்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

காரணம் : (கா.) : அவை தலைவன் பெயரைச் சுட்டுகின்றன.

(1) (உ.) சரி, (கா.) தவறு (2) (உ.) சரி, (கா.) சரி

(3) (உ.) தவறு, (கா.) தவறு (4) (உ.) தவறு, (கா.) சரி

**99.** பொருத்துக :

(a) அகச்செய்யுள் (i) கைக்கிளை

(b) அகப்புறச் செய்யுள் (ii) அன்பின் ஐந்திணை

(c) பெருந்திணைச் செய்யுள் (iii) தலைவன் பெயர் சுட்டும் அகப்பாடல்

(d) புறப்பாடல் (iv) நாயகன், நாயகி பாவம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (i) | (ii) | (iii) | (iv) |
| (2) | (iii) | (i) | (ii) | (iv) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (iv) | (i) | (iii) | (ii) |

**100.** வரிசைப்படுத்துக :

(1) திருச்சாழல், அன்னைப்பத்து, திருத்தசாங்கம், திருக்கோத்தும்பி, திருவுந்தியார்

(2) அன்னைப்பத்து, திருத்தசாங்கம், திருக்கோத்தும்பி, திருச்சாழல், திருவுந்தியார்

(3) திருக்கோத்தும்பி, திருச்சாழல், திருவுந்தியார், அன்னைப்பத்து, திருத்தசாங்கம்

(4) திருவுந்தியார், திருச்சாழல், திருக்கோத்தும்பி, திருத்தசாங்கம், அன்னைப்பத்து

**- o O o -**



www.examrace.com

**Space For Rough Work**

Exam Race



www.examrace.com